மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அம்மாதிரி கடன் கொடுக்கவும் விதி முறைகளில் வாய்ப்பு இருக்கிறது. பூமியின் பெருமானம் 10 ஆயிரம் என்றால், அதில் முக்கால் பங்கு 7,500 வரை கடன் பெறக்கூடும். பூமியின் மதிப்பு அப்போதைக்கு குறைவாக இருந்தாலும் கிணறு வெட்டுவதனால் அதன் மதிப்பு உயரக் கூடும் என்கிறபோதும் கடன் உதவி அளிக்கப் படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கிணறு வெட்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுக்கப்படுகிறது. அந்த வேலையை முடிக்க சிறிது காலம் தாமதமாகிவிட்டது என்றால் கூட தவணை முறைகளை ஒழித்து, உடனடியாக மொத்தப் பணத்தையும் கட்டவேண்டுமென்று உத்திரவு போடுகிறார்களே, அப்படி இன்றி தவணை முறையிலேயே வசூல் செய்வதற்கு உத்திரவு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

திரு. மு. கிருஷ்ணமூர்த்தி : தமிழக அரசு ஏற்பட்ட பிறகு இதுவரை எத்தனை விவசாயிகளுக்குக் கிணறு வெட்டக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது ? மொத்த தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. பி. வேலுசாமி : கோவை மாவட்டத்தில் ஒரு கிணறு வெட்டுவது என்றால் 100 அடி, 120 அடி வெட்ட வேண்டியதாக இருக்கிறது. அதை அனுசரித்து அந்த மாவட்டத்திற்குக் கிணறு வெட்டக் கடன் அளிக்கப்படும் தொகையை அதிகமாகக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்த முறையில்தான் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : நாலாயிரம் ரூபாய் கிணறு வெட்டச் செலவானால் அரசு ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கிறது. பதினைந்து அடி வெட்டியவுடன் பாறை வந்துவிட்டால் மிகக் கஷ்டமாகப் போய்விடுகிறது. ஆகவே, பாறை பகுதி முழுவதையும் எடுக்க என்ன செலவாகிறதோ அதை அரசு மானியமாக அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நல்ல யோசனை, அது பற்றி பரிசீலிக்கலாம்.

Extraction of Jasmine oil

*** 201 *Q*.—THIRU N. S. V. CHITHAN :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are schemes before the Government for the extraction of jasmine oil at the Horticultural Department, Coimbatore, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) and (இ) கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த தோட்டக் கலைப் பிரிவில் மல்லிகைத் தைலம் எடுக்கும் திட்டம் எதுவும் இல்லை. எனினும் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் பூச்செடிகள் வளர்ப்புப் பிரிவை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் கீழ் பல இனங்கள் குறித்து நாளடைவில் ஆராய்ச்சி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. கண்கவர் வனப்புச் செடிகளை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மைத் தொழில் வாய்ப்புகள் குறித்து ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்வதும் அந்த ஆராய்ச்சி இனங்களில் ஒன்றாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் ரோஜா, மல்லிகை மலர்கள் நிறைய, உற்பத்தியாகின்றன. ஆகவே, மதுரையிலும் இந்த மலர்களில் இருந்து தைலம் எடுக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மதுரையாக இருந்தாலும், கோயம்புத்தூராக இருந்தாலும் ஒன்றுதான். முதலில் கண்கவர் பூக்களை வளர்க்க வேண்டியிருக்கிறது. அவற்றை வளர்த்துத் தைலம் எடுக்கப் பூர்வாங்கமாக இப்போது ஆராய்ச்சி நிலைதான் இருக்கிறது. ஆராய்ச்சி முடிந்த பிறகு இது பற்றி சிந்திக்கலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மல்லிகைத் தைலம் எதற்குப் பயன்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் தைல வியாபாரி அல்ல. உறுப்பினருக்கு அதில் அனுபவம் இருந்தால் அதை இந்த மன்றத்திற்குச் சொல்லலாம். (சிரிப்பு.)

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Jasmine flowers are grown in plenty in the Dharmapuri district especially in the Hosur taluk. Sometime back the Dharmapuri District Development Council also has recommended the starting of such an industry at Hosur. So, I wish to know from the Hon. Minister, what steps have been taken in that direction ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I am not aware of that recommendation.

திரு. சி. கோவிந்தராசன் : மல்லிகைத் தைலம் எந்தவிதமான ஆரோக்கியத்தையும் அளிப்பதில்லை. அதற்கு மாறாக மக்களுக்கு மிகுந்த ஆரோக்கியத்தை அளிக்கும் அரைக்கீரை, கரிசலாங்கண்ணி போன்றவற்றைப் பயிர் செய்து தைலம் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மல்லிகைத் தைலம் பிரயோசனம் இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். மலர்களிலேயே சிறந்தது மல்லிகை. மாற்றான் வீட்டுத் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணக்கும் என்பது உலக மரபு. இதுதான் முதற்படி. மற்றவை பற்றியும் ஆராய்ச்சிகள் செய்யலாம்.

திரு. மு. ச. சிவசாமி : நெல்லை மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையோரங்களில் லெமன் கிராஸ் (புல்) ஏராளம் வளர்ந்து வீணாகிக் கொண்டிருக்கிறது. இதில் இருந்து தயாரிக்கப்படுகிற தைலம் அந்நியச் செலாவணியை நமக்குத் தேடித் தரத்தக்கது. ஆதலால் குற்றாலத்திலோ, பாபநாசம் அருகிலோ இந்த லெமன் கிராஸ் (புல்) தைலம் எடுக்க முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தைல உற்பத்தியில் நமது உறுப்பினர்கள் மிகுந்த உற்சாகம் எடுத்துக்கொள்கிற காரணத்தினால் இது சம்பந்தமான நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திலே ஏதாவது சொல்லவேண்டுமென்று சொல்லக்கூடாது. மூலக் கேள்வியிலே சொல்லப்பட்டிருப்பதை யொட்டியவையாகத்தான் துணைக் கேள்விகள் இருக்கவேண்டும். மல்லிகையிலிருந்து தைலம் இறக்குவதைப் பற்றி மூலக் கேள்வி இருக்கும் பொழுது, இன்னொரு புல்லிலிருந்து தைலம் இறக்குவதைப் பற்றி யெல்லாம் துணைக்கேள்விகள் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.